அனுப்புநர்:

**மோ. அருந்ததி அரசு,** தொடர்புக்கு : 98945-77323.
மாவட்ட செயலாளர்,
ஆதி தமிழர் பேரவை,
27/59, 3வது தெரு,
கணேசபுரம், பொன்மலை,
திருச்சி-620 004.

பெறுநர்:

1. உயர்திரு **மாவட்ட ஆட்சித் தலைவர்** அவர்கள்,
   மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,
   திருச்சிராப்பள்ளி.
2. உயர்திரு **காவல்துறை ஆணையர்** அவர்கள்,
   திருச்சிராப்பள்ளி.
3. உயர்திரு **காவல்துறை கண்காணிப்பாளர்** அவர்கள்,
   திருச்சிராப்பள்ளி.
4. உயர்திரு **காவல்துறை துணை கண்காணிப்பாளர்** அவர்கள்,
   திருச்சிராப்பள்ளி.
5. உயர்திரு **வட்டாட்சியர்** அவர்கள்,
   திருச்சிராப்பள்ளி.
6. உயர்திரு **கோட்டாட்சியர்** அவர்கள்,
   திருச்சிராப்பள்ளி.
7. உயர்திரு **காவல் ஆய்வாளர்** அவர்கள்,
   ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி.

அய்யா அவர்களுக்கு,

திருச்சி ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில் பாதாள சாக்கடையை 21.06.2010 அன்று ஒப்பந்த துப்புறவு தொழிலாளர்கள் சுந்தரராஜன், லெட்சுமணன், விஷ வாயு தாக்கி இறந்துபோன வழக்கை **304 ஏ-யின்கீழ் வழக்கு** போடப்பட்டுள்ளது.

இந்த வழக்கை திருத்தி **பி டெஹ்** துணை ஒப்பந்தக்காரர் முதலாளியின்மீதும், **சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்** ஒப்பந்தக்காரர் முதலாளியின்மீதும், **திருச்சி மாநகராட்சி ஆணையர்** மீதும் **1993-ம் ஆண்டின் மனிதர் கழிவை, மனிதர் கையால் அள்ளும் தடை சட்டத்தின்கீழ்** வழக்கு பதிவு செய்யவும். மேலும் **வன்கொடுமை சட்டத்தின்கீழும்** வழக்கு பதிவு செய்யவும். மேலும் போன வருடம் 12.08.2009 அன்று ஸ்ரீரங்கம் பாதாள சாக்கடை விஷ வாயு தாக்கி இறந்துள்ளனர். தொடர்ந்து 5 பேர் பாதாள சாக்கடை விஷ வாயு தாக்கி இறந்துள்ளனர். மேலும் இவ்வாறான பணிகளில் மனிதரை ஈடுபடுத்தக் கூடாது.

ஆகவே, இம்மனு மீது போர்கால அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

<u>குறிப்பு</u> :

திருச்சி மாநகராட்சியில் தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகள் 1993-ம் ஆண்டின் மனிதர் கழிவை, மனிதர் கையால் அள்ளும் தடை சட்டத்திற்கு புறம்பாக நடக்குமேயானால் ஆதித்தமிழர் பேரவை இதில் தலையிட்டு இதை தடுத்து நிறுத்த முற்படும். இதனால் ஏற்படும் சட்ட ஒழுங்கு பிரச்சனைகளுக்கு மாநகராட்சி ஆணையாளரே பொறுப்பாவார்கள். ஆணையாளர் மீது சட்டப்படி வழக்கு தொடர வழக்கு மன்றத்தை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே, இதுபோன்ற சட்டத்திற்கு புறம்பான நிகழ்வுகளை தடுத்து நிறுத்துமாறு பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் விடுதலை பணியில்

மோ. அருந்ததி அரசு
மாவட்ட செயலாளர்